இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 10 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 03 – திங்கள்கிழமை 19 ஆகஸ்டு 2024 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 10 : Thiruvalluvar Year - 2055 - Aavani 03 - Monday 19 August 2024 - Madurai 8 Pages ₹ 5.00

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

### ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார் ! அமைச்சர் துரைமுருகன் முன்னிலை!

# வரலாற்றில் அழியாத முத்திரைப் பதித்தவர் கலைஞர்!

## பிரதமர் மோடி அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் புகழாரம்!

**சென்னை, ஆக. 19 -**

**சென்னையில் நேற்று, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் நாணயத்தை வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு மாநில நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் முன்னிலை வகித்தார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா நேற்று (18.8.2024) நடைபெற்றதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

இந்தியாவின் தலை சிறந்த தலைவர்களில் ஒருவரான முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவையொட்டி பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா நடைபெறவிருப்பது அறிந்து தான் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும், இவ்விழா இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற தலைவர்களில் ஒருவரான கலைஞர் அவர்களுக்காக நடைபெறும் முக்கியமான விழாவாகும் என்றும் தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர்






அவர்கள், இந்திய அரசியல், இலக்கியம் மற்றும் சமூகப் பணிகள் ஆகிய பல்வேறு களங்களில் உயர்ந்து விளங்கிய தலைவராக திகழ்ந்த கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும், நாட்டின் முன்னேற்றத்திலும் எப்போதும் அக்கறை கொண்டவராக விளங்கினார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சிறந்த அரசியல் தலைவராக திகழ்ந்த கலைஞர் அவர்கள், மக்களால் பலமுறை முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பதவியிலிருந்து சமூக வளர்ச்சி மற்றும் அரசியல் குறித்த அவரது ஆழமான புரிதலை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் நமது நாட்டின் வரலாற்றில் அழிக்க முடியாத அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

பன்முகத் திறமை கொண்ட கலைஞர் அவர்கள், தனது எழுத்துக்களின் மூலம் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் இன்றும் மக்களால் நினைவுகூரப்படுகின்றன என்றும், அவரது இலக்கிய ஆற்றல், அவரது படைப்புகளின் மூலம் பிரகாசித்தது மட்டுமல்லாமல், அவருக்கு 'கலைஞர்' என்ற அன்பான பட்டத்தையும் பெற்றுத் தந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நினைவு நாணயம் வெளியிடப்படுவதன்மூலம், கலைஞர் அவர்களின் நினைவு போற்றப்படுகிறது என்றும், இந்த நினைவு நாணயம் கலைஞர் அவர்கள் பின்பற்றிய கொள்கைகள், மரபுகள் மற்றும் அவரது பணிகளை என்றென்றும் நினைவூட்டுவதாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த முக்கியமான தருணத்தில் கலைஞர் அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த அஞ்சலியைச் செலுத்த விரும்புவதாக குறிப்பிட்டுள்ள பிரதமர் அவர்கள், 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதை நோக்கி நாம் நம்பிக்கையுடன் நடைபோடும் இந்த வேளையில், கலைஞர் போன்ற தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையும், சிந்தனைகளும், நம் தேசத்தின் பயணத்தைத் தொடர்ந்து வடிவமைக்கும் என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா மாபெரும் வெற்றியடைய தனது வாழ்த்துக்களை தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**பிரதமருக்கு முதல்வர் நன்றி!**



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவையொட்டி பிரதமர் அவர்களின் வாழ்த்துச் செய்திக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவுக்கு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தமது உளங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்தமைக்கும், இந்நிகழ்வு வெற்றிபெற அவரது ஆதரவுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

### தொழில் வளர்ச்சிக்காக பல சிறப்புத் திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்தி வருகிறோம்!

# தெற்காசியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம்!

## திருப்பெரும்புதூரில் பெண் பணியாளர்களுக்கு சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**திருப்பெரும்புதூர், ஆக. 19 -**

**திருப்பெரும்புதூரில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திராவிட மாடல் அரசு தொழில் வளர்ச்சிக்காக பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது எனவும், தெற்காசியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதே நம் இலட்சியம் எனவும் குறிப்பிட்டார்.**

இந்தியாவிலேயே முதன் முறையாக காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் வடகால் கிராமத்தில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக 706.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2024) திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு :-

உலகளாவிய நிறுவனமாக இருந்தாலும் ஃபாக்ஸ்கான் குழுமத்தின் சிறப்பான இந்தியச் செயல்பாடுகளுக்காக அதன் தலைவர் யாங் லீயு அவர்களுக்கு 'பத்ம பூஷன்' விருது வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக, யாங் லீயு அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் இன்னும் பல சிறப்புகளை, பெருமைகளை பெற வேண்டும் அதற்காக வாழ்த்துகிறேன்.

**உலகத்திலேயே மிகப்பெரிய மின்னணுவியல் நிறுவனம்!**

தைவான் நாட்டைச் சேர்ந்த ஃபாக்ஸ்கான், உலகத்திலேயே மிகப்பெரிய மின்னணு வியல் உற்பத்தி நிறுவனம். உலகளவில் புகழ்பெற்ற ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன் களுக்கான உதிரி பாகங்களை பொருத்தி ஒருங்கிணைக்கும் நிறுவனம் இது.

12 நாடுகளில் தன்னுடைய உற்பத்தி நிறுவனங்களை அமைத்திருக்கிறது. இந்தக் குழுமம் தமிழ்நாட்டில் திருப்பெரும்புதூரில் இரண்டு உற்பத்தி அலகுகளை நிறுவி இருப்பது நமக்கு கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமை. இதற்காக ஃபாக்ஸ்கான் நிறுவனத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**தமிழ்நாட்டில்தான் தொழிற்சாலைகளில் பணி புரியும் பெண்களின் எண்ணிக்கை அதிகம்!**

இரண்டு ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில் 41 ஆயிரம் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் அதில் 35 ஆயிரம் பேர் பெண்கள். ஆணுக்கு பெண் சமம் என்பதை தாண்டி ஆண்களைவிட, கூடுதலான பெண் தொழிலாளர்கள் இருப்பதை பெண் எனும் பேராற்றலுக்குத் தரும் முக்கியத்துவமாகவே பார்க்கிறேன்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.08.2024) இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் – வடகால் கிராமத்தில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக 706.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 18,720 படுக்கைகள் கொண்ட சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யாங் லீயு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், இந்தியாவிற்கான தைவான் நாட்டு தூதர் பௌஷன் ஹேர், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மரு.கி.செந்தில்ராஜ், மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்தையும்விட, தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில்தான் அதிகமாக இருக்கிறது. அதாவது 42 விழுக்காடு என்ற அளவில் இருக்கிறது. அந்த வகையில், உங்கள் நிறுவனத்தின் சமத்துவ நோக்கத்தை பாராட்டுகிறேன். பெண்களின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு எத்தனையோ திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்